தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-12-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் விஞ்ஞானிக்கு விருது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் மேலாண்மை இயக்குனராக பணிபுரியும் முனைவர். கெ. வேலாயுதம் இந்திய வேளாண் உழவியல் சமூகத்தின் ISI கல்வியாளர் -2011 விருது பெற்றார். முனைவர் வேலாயுதம் 1956 ஏப்ரல் 2ம் நாள் பிறந்தார். 1977 ல் இளமறிவியல் பட்டம் பெற்றார். முதுகலைப் பட்டம் 1979-ல் பெற்றார். 1984ல் முனைவர் பட்டம் உழவியலில் புதுதில்லியில் இந்திய ஆராய்ச்சி கழகத்தில் பெற்றார். சோளம் மற்றும் தீவனப்பயிர்கள் ஆராய்ச்சியில் பலவகையான வியாபார ரீதியான தொழில்நுட்பங்களை கண்டறிந்தார். 2000 ஆண்டு சிறந்த ஆசிரியர் விருதும் 2004 ல் சிறந்த விரிவாக்க விஞ்ஞானி விருதும், சிறந்த குழு ஆராய்ச்சி விருது 2007ல் பெற்றார்.

மேலும் தீவன பயிர் இரகங்களில் ஐந்து இரகங்களை வெளியிட ஆராய்ச்சி மேற்கொண்டார். அதில் பசுந்தீவன தொழில்நுட்பம் பெருமளவில் பிரபலப்படுத்தினார். அதன் மூலம் தென்னிந்தியாவிலுள்ள வேளாண் பெருமக்கள் மற்றும் பால்உற்பத்தி தொழில் முனைவோர்கள் பெரிதளவு பயன்பெற்றனர்.

மேலும் வேலாயுதம் அவர்கள் 30 ஆண்டு கால ஆசிரியர் அனுபவமும் 7 முதுகலை மாணவர்களையும் 6 முனைவர் பட்டம் மேற்கொண்ட மாணவர்களையும் வழிகாட்டி ஆராய்ச்சியாளராக இருந்துள்ளார். 90 ஆராய்ச்சி கட்டுரைகள் 10 தொழில்நுட்ப பிரசுரங்கள் 10 புத்தகங்கள் 110 பொதுகட்டுரைகள் எழுதியுள்ளார். நெதர்லான்ட் நாட்டிலுள்ள வேஜ்னிங்கன் பல்கலைக்கழகத்தில் சுற்றுப்புற சூழல் ஆராய்ச்சிக்காக சென்றுள்ளார்.

மக்கள் தொடர்பு அலுவலர்